Judicial Form No. 53

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar | Case No.C.C.No. 65/2026 |
| Deposition of Sworn Statement | PW3 |
| Name | : புஷ்பாகரன் ( காவல் உதவி ஆய்வாளர்) |
| Father's Name/Husband Name | : தேவராஜ் |
| Village | : தர்மபுரி |
| Taluk | : தர்மபுரி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.06.2026

**எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 10.11.2025 ம் தேதி நான் பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 16.00 மணியளவில் எனது தலைமையில் நானும் என்னுடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக பொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பையர்நத்தம் கிராமத்தில் கண்காணித்து கொண்டிருந்தபோது அதே ஊரை சேர்ந்த எதிரி மாதுராஜ் த/பெ.வெங்கடேசன் என்பவரது வீட்டின் பின்புறம் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தபோது எதிரி 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார் எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை கைப்பற்றுதல்

மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மதுவுடன் கூடிய மது பாட்டில்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் கொண்டு வந்து அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண் 460/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை தர்மபுரி மாவட்ட உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) அவர்களுக்கு ஒப்படைத்து கைப்பற்றப்பட் வழக்கு சொத்தை அரசுடைமையாக்க வேண்டி வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன்.

பின்னர் எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் தர்மபுரி மாவட்ட உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) அவர்கள் எங்களது வேண்டுகோளின் படி 460/2025 குற்ற எண்ணில் கைப்பற்றப்பட்ட மது மற்றும் 26 மது பாட்டில்களை கொட்டி அழித்து அழித்தற்கான அறிக்கையை எங்களுக்கு வழங்கினார்.

மேற்படி அறிக்கையை நான் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

**தர்மபுரி மாவட்ட உதவி ஆணையர் (ஆயத்தீர்வை) அவர்களின் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 10.11.2025 ம் தேதி எதிரி மாதுராஜ் என்பவருக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி மதுபாட்டில்களை முள்புதரில் மறைத்து வைத்திருந்தார்.

மதுபாட்டில்கள் மூடி திறந்த நிலையில் இந்தது.

கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது.

நான் சம்பவயிடம் செல்லாமல் புள்ளி விவரத்திற்காகஇந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**

Judicial Form No. 53

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar | Case No.C.C.No.65/2026 |
| Deposition of | PW2 |
| Name | : **சத்யா (தலைமை காவலர்)** |
| Father's Name/Husband Name | : முருகன் |
| Village | : அ.பள்ளிப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிபட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.06.2026

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை.</u>**

நான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்,

கடந்த 10.11.2025 ம் தேதி 16.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் அவர்களது தலைமையில் நானும் என்னுடன் தலைமை காவலர் அ.சா.1 வெங்கடாசலம் ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக பொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பையர்நந்தம் கிராமத்தில் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி மாதுராஜ் அவரது வீன்டின் பின்புறம் சந்தேகத்தின்பேரில் பிடித்து சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை வைத்திருந்தார். எதிரி எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை

காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லததால் என்னுடன் வந்த தலைமை காவலர் அ.சா.1 வெங்கடாசலம் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்.

கைப்பற்றுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் அ.சா.1 வெங்கடாசலம் அவர்களும் கையொப்பம் செய்தோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைதுதான். **கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றி எதிரியை நிலையம் கொண்டு வந்தார்.

பின்னர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார்.

காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து எழுதிகொண்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம்.

கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை காவல் நிலையத்திற்கு எடுத்துவந்துவிட்டோம்.

கைப்பற்றப்பட்ட பொருட்களை வழக்கு சொத்தாக சேர்க்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

கைப்பற்றபட்ட மதுவை கொட்டி அழிக்கும்போது வீடியோமற்றும் புகைபடம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எடுத்தோம்.

எனது உயர் அதிகாரி கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**

Judicial Form No. 53

[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Calendar | Case No.C.C.No.65/2026 |
| Deposition of | PW1 |
| Name | : **வெங்கடாசலம் (தலைமை காவலர்)** |
| Father's Name/Husband Name | : முனுசாமி |
| Village | : தருமபுரி |
| Taluk | : தருமபுரி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : |
| Religion | : Hindu |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.06.2026

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்,

கடந்த 10.11.2025 ம் தேதி 16.00 மணியளவில் நான் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் அவர்களது தலைமையில் நானும் என்னுடன் தலைமை காவலர் சத்யா ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக பொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பையர்நந்தம் கிராமத்தில் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி மாதுராஜ் அவரது வீன்டின் பின்புறம் சந்தேகத்தின்பேரில் பிடித்து சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை வைத்திருந்தார். எதிரி எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்ட்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்த

இடத்திலேயே கைது செய்தார்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லததால் என்னுடன் வந்த தலைமை காவலர் சத்யா முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy 26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்.

கைப்பற்றுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் சத்யா அவர்களும் கையொப்பம் செய்தோம்.

இன்று என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடைதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றி எதிரியை நிலையம் கொண்டு வந்தார்.

பின்னர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார்.

காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து எழுதிகொண்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம்.

கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை காவல் நிலையத்திற்கு எடுத்துவந்துவிட்டோம்.

கைப்பற்றப்பட்ட பொருட்களை வழக்கு சொத்தாக சேர்க்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

கைப்பற்றபட்ட மதுவை கொட்டி அழிக்கும்போது வீடியோமற்றும் புகைபடம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல, எடுத்தோம்.

எனது உயர் அதிகாரி கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**